சுத்தாத்வைதவேதினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 5] MADRAS:—SUNDAY JANUARY, 30, 287. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

தெய்வச்செயல்.	ஜுபிலிஉற்சவஜயத்தம்.
வாதப்பிரதிவாதம்.	சடிதம்.

தெய்வச்செயல். 29

தெய்வமென்பது, ஆத்திகாளுடைய மனக்கானலிலே அநுபவக்கியான மெனும் மழை பெய்யாமலும், உண்மை ஞானமெனும் கதிரவன் உதிக்காமலும், விசாரணையெனும் ஏருழாமலும் முளைத்தெழும் அறியாமை யென்னுங் கள்ளியே. கள்ளிபோன்ற அறியாமையை மீண்டும் ஆத்திகாள் தேவன்தேவன் எனரூபகப்படுத்தி, அறியாமையால் நிகழுந் தொழில்களை தெய்வச் செயலெனவும் தீர்மானிக்கின்றனர். ஆனால் ஆத்திகாளால் இவ்விதம் தீர்மானிக்கப்பட்ட சித்தாந்தமோ பற்பல வேறுபாட்டையுடையது. அவ்வேறுபாட்டினை அடியில் வருமாறு காண்க. ஆத்திகமென்பது, வேதாந்தம், சைவம், வைணவம், கிறிஸ்துமதம் முதலிய மதங்களுக்குப் பொதுப்பெயர்.

க. வேதாந்தம்: இம்மதம் அகண்டமாயும், எங்கும் நிறைந்ததாயும், நிர்விகாரமாயும் உள்ளது பிரமமென்றும், அதின் பிரதிபிம்பமே இப்பிரபஞ்சமென்றும், ஆதலால் பிரமம் மெய்யென்றும், பிரபஞ்சம் பொய்யென்றும், பொய்யாகிய விப்பிரபஞ்சத்தில் ஓர்வித சொரூபமாய் விளங்கும் மனிதர் யாவரும் இச்சொரூபத்தை யொழித்து இனி யாதொரு சொரூபத்தை யேனும் அடையாவழி தேடவேண்டுமென்றும் கூறும்.

பிரமம் அகண்டமாயின் அதன் பிரதிபிம்பமும் அகண்டமாயன்றோ இருத்தல்வேண்டும்? அவ்வாறில்லாமல் பிரபஞ்சத்தின்கண் உள்ள பொருள்கள் தத்தமக்குரிய நாமரூபங்களால் கண்டாகாரமாய் விளங்குவானேன்! பிரமம் எங்கும்நிறைந்திருக்குமாயின் அதன் பிரதிபிம்பம் விழுவது எங்கே! அதனைப் பிரதிபிம்பிக்கச்செய்யுமொளியேது? அவ்வொளிக்குஸ்தானமேது? நிர்விகாரமாகியஅப்பிரமத்தைபிரபஞ்சமாய்பிரதிபிம்பிக்கச்செய்தவொளியால்அதன் நிர்விகாரத்துவம் நிலைகுலைந்தொளிமழுங்கியதன்றோ? ஆகவேவிசாரணையினால், 'பிரமம் மெய்யென்பது' பொய்யாயும், அநுபவக்கியானத்தால், 'பிரபஞ்சம் பொயயென்பது' பொய்யாயும் வெளிப்படுகின்றது. 'உள்ளபொருள் இல்லாமற்போகாது' என்பதனாலும், 'சொரூபமின்றி பொருளில்லை' யாதலாலும் தற்காலம் உள்ள சொரூபத்தை யொழிப்பது சாத்தியமாயினும் வேறெந்த சொரூபததையேனும் அடையாவழி தேடுவது வீண் பிரயத்தினமும் அசாத்தியமுமாய் முடியுமென்பதற் கையஞ் சிறிதுமில்லை.

உ. சைவம் வைணவம்: இம்மதங்கள், பசு, பதி, பாசம் என மூன்று பதார்த்தங்கள் நித்தியமாயுள்ளனவென்றும், அவற்றுள் பதியானது தன்னையும், பசு, பாசங்களையு மறியுமென்றும், பசுவானது பாசத்துடன் கலந்தமாத்திரத்தில் தன்னையும், பாசத்தையும் அறியுமென்றும், பாசமானது எக்காலத்தும் அந்தகாரத்திலிருப்பதென்றும், ஆகவே பதியானது தன்னை பசு அறியும்வண்ணம் அப்பசுவினை பாசத்தோடு பந்தித்து அப்பந்தனையால் பசுவிற் கியற்கையாயுள்ள அறியாமையை நீக்கி தன்னை யதன்பின் அறியச்செய்கின்றதெனவும் கூறும். பசு பதி பாசங்களை முறையே வைணவர் ஜீவ பர கன்மம் எனக் கூறுவர்.

ஆனால் பசுவானதுபாசத்தோடு கலந்தமாத்திரத்தில் தன்னையும் பாசத்தையும் அறியும் என பதியறிந்தது பசுவானது பாசத்துடன் கலந்ததற்கு முன்னேயா. பின்னேயா? முன்னமேயாயின் ஓர் விஷயம் சம்பவித்ததற்குமுன் அவ்விஷயத்தை யெங்ஙனம் அறியக்கூடும்! பிற்பாடாயின் பசுவானது பாசத்துடன் கலவாதிருந்தகாலம் ஒன்றுண்டென வெளிப்படுகின்றது. இவ்வாறு வெவ்வேறாயிருந்த பசுவையும் பாசத்தையும் சேர்த்தது யாதென வினா நிகழும். இவ்வினாவிற்கு சைவாள் பதியாகிய சிவனென்றும், வைணவர் பரமாகிய விட்டுணுவென்றும் விடையளிப்பர். சிவனென்றும் விட்டுணுவென்றும் சொல்லப்படும் பதியானது பசுவையும் பாசத்தையும் ஒருங்கே சேர்க்கத் துணிந்து தானும் பசுவினிடம் சேரத்துணியாமை குரங்கு தன் குட்டியைக்கொண்டு சோதிப்பதுபோல விருக்கின்றதன்றோ? பசுவானது பாசத்துடன் கலக்கப்பட்டு தன்னையும் பாசத்தையுமறிந்ததனாலடைந்தபயனென்னை? துயருறுகின்றதன்றோ! இத்துயர்க்குக் காரணம் பதியன்றோ! பதியின் செய்கையால் துயருற்ற பசுவை பாசத்தினின்று மீண்டும் மீள்விக்க வறியாததாய் பதியானது பசுவே பசுவே நீ மீண்டும் பாசத்தைவிட்டு நீங்கி என்னிடத்தில் வா வா வென்று அழைப்பது, தாங்குமொருவனை சேற்றினிடத்தாழ்த்திவிட்டு மறைவில் நின்று சேற்றினின்று வோடிவா வோடிவாவென்று அழைக்கும் புத்தியிலியும் மீட்கச் சத்தியிலியும், ஆகிய ஒருவன் செயலை யொத்திருக்கின்றதன்றோ! பாசத்தோடு பசுவைக் கூட்டுவித்த பதியானது அப்பாசத்தோடு தான் கலந்து மீளாச்சிறைபூண்டுபசுக்களை அவையிருந்தவாறு விடாமை சைவரும் வைணவரும் அடையும் துர்ப்பலனாக்கும். D.

(இன்னும்வரும்.)

வாதப்பிரதிவாதம். 19

பன்னருந்தமிழாம்பாற்கடலதனைச்
சொன்னயப்பொருணயச்சுவைமிகவுணர்ந்த
தத்துவவிசாரிணிபத்திராதிபரே-வந்தனம்.

நிகழ்ந்த டிசம்பர்மீ கச-ம் திகதிதனில் (சென்றவாரப்பத்திரிகையில்காண்க.) யாங்கடாவியவினாக்கட்குத் தாங்களளித்த விடையின் திறத்தைச் சிறிது சீர்தூக்கிக்காட்டுவோம்.

"கெடுவல்யானென்பதறிக, தன்னெஞ்சு
நடுவொரீஇயல்லசெயின்."

ஆதலின், சமரசசன்மார்க்க சிகாமணிகள் செவி சாய்ப்பாராக.

கற்பிதமாயுண்டாக்கப்பட்ட சமயங்களும், அவற்றின் துணியாயிலங்குந் தெய்வங்களை வழிபட்டொழுகலும் நற்பயனை நல்காவா என்ற வினாவுகருத் தாங்கள், இம்மியளவாய சிலதிமைகளைமாத்திரங் காட்டி, அளவிகந்தநன்மையைக் கண்ணுறாதிருத்தல் சாலவழகுடைத்து. ஒரு ஏற்பாட்டை யங்கீகரிததலால் விளையுந் தீமைமல்கி நிற்புழி யதனைத் திரஸ்கரித்தலும், நன்மைமிக்கிருப்புழி யதனை யங்கீகாரஞ்செய்தலுமன்றோ விவேகிகளிலக்கணம். அங்ஙனமின்றி, சமன்செய்து சீர்தூக்குங் கோலினதிலக்கணமமையப் பெறாது; தீமையினைமாத்திரங்காட்டித் தம்கட்சியைத் தாபித்தல் பளா! பளா! நன்று நன்று!

"நெல்லினதுமிபோக்கி அரிசியைக்கொள்வதுபோல் குற்றத்தை நீக்கி குணத்தைக்கொள்வதல்லவா மானுஷீகம்" என்றீர், அஃதுண்மையேயாதலின், தாங்கள் காட்டிய சிற்சில குற்றங்களை நீக்கிக் குணத்தைக்கொள்வோம். (a) நும்மொழிகளாலேயே, குற்றங்கள் நீங்கிய சமயங்களும் தெய்வங்களு நிலைநின்றமைகாண்க. அற்றேல், ஆத்திகவைரிகளாய் துவசமெடுத்து வெளிவருவது என்னக் கருதி? ஏனையோர் 'உளது' என்பதை 'இலது' என்றறைவதாற் பெருமை பெறலாமென்று தானோ? விடைபகர்மின்: தீமை சிறிதாயினு மவ்வேற்பாடுகளிலுளவாதலின் யாமுற்று மவற்றைக்கொள்ளேமென்று பகர்வீராயின், "நெல்லுக்குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு புல்லிதழ் பூவிற்குமுண்டு" ஆமாதலின்,

யாம் சோற்றைத்தின்னேம், நீரை யுட்கொள்ளோம், பூவினையுஞ்சூடோமென்பீர்போலும்.

நீவிர் தீமைகளென எடுத்துக்காட்டிய சிலவற்றின் ஆபாசத்தை யெடுத்துக்கழறுவாம்.

"சைவர் இதக்கழுகுத்து க்ஷமணுதிபுறச்சமயிகளைக்கழுவேற்றி" னர். என்றீர்.

(b) அந்தோ! சைவசமயத்தின் சரிதைகளை முழுதொருங்குணர்ந்தீர்போலும். சைவசமய குரவராகிய எம்பந்தமறுக்குஞ்சம்பந்தப்பெருமான் க்ஷமணுதிகளை யிரக்கமின்றிக்கழுவேற்றினரா? க்ஷமணர்தாமேகழுவேறினரா? சைவனையடுத்தறிமின்:

"நன்றிதேறுர் பின்புள்ளமானமிழந்துநாணழிந்து [மக்
குன்றுபோலுந்தோணிபுரக் கோமானெதிரேயாங்களு
[து
கின்றுதோற்றேமெமையிண்டுநீரோ வென்றீரோனநேர்
நின்றுகூறக்கவுணியர்கோனனையாருய்யுநெறிநோக்கா.'
[றீா
"இன்னமறத்தாறிசைக் கின்றேநீரோன்வாளாவிறக்கின்
அன்னையனையானெம்மிறைவ னவனுக்காளாயும்மின்ச
[ழி
ளென்னவேடசிறியாய்நீ யெவ்வாறெங்கட்கடாதமெ"
சொன்னதென்று மானமுளார் கழுவிலேறத்தொடங்கி
இவ்வண்ணமாக— [ஞர்"
"மதத்தினின்மானமிக்கார் தாங்களேவலியவேறிப்
பதைத்திடவிருந்தார்"

மேலய திருவாக்கினுண்மையினையும் பத்திராதிபரது வாக்கினுபாசத்தினையுந் தெள்ளறிஞர் சீர்தூக்கித்தெளிவாராக.

ஆயினும் "ஏனைப்பறிதலை யவரைச் சைவவிதத்தினலொழுக்கம் பூண்டவேடத்தார் பற்றிப்பற்றிச் சிதைத்திடர்செய்தேறிட்டார் திரிதலைக் கழுக்கோறன்னில்" இதுமறக்கருணையென்க.

மதாவேசங்கொண்டு சைவரைக் கொலைபுரிந்துவந்த மகா பாபரூபிக ளின்னு முயிர்வாழ்ந்து, சகோதரரை நிர்மூலமாக்குவதை விலக்குவான்கருதியே, மானிட சுகாதாரவேதுக்களிலும், பிரஜாரோக்கிய பிரஜானுகூல பிரவர்த்தனதிகளில் நாட்டம்வைத்த அக்காலத்துச்சைவர், அவ்வமணரைச் சங்கரித்தனர்காண்க. தன்குடிகளை யோம்புமோர் மன்னவன், ஏனையோர்க்கு ஹானியை விளைக்குந் தீமையாளரைக் கொலைபுரிதல் மானுஷீகமன்று?

இங்ஙனமே யேனையவற்றின் ஆபாசத்தினையும் இடம்பெற்றுழிவருகிற முறை யெடுத்துக்காட்டுவாம்.

"சமயத்தை யுணர்த்துவதுபோல சாத்திரங்களை யுணர்த்துதல் கூடுமே" என்றீர்.

(c) சாத்திரத்திற் பயிலுவதற்கின்றி யமையாதனவாகிய தேகதிடம்,மதினுட்பம் முதலிய அமையப்பெருத கோடானுகோடிகள்போம்வகையாது? கடாவிய வினைக்கட்கு நேரான விடைகளைத் தூஷணை யொழித்து நியாயவாயிலாய்ச் சகோதர வாஞ்சையுடன் தீட்டிக் காட்டுமின்.

22nd December 1879.
Madras.

(இன்னும்வரும்.)

T. Balasundaram Mudr.

(a) மதங்களனையவும் மனிதரது ஏற்பாடுகளென்பதனைச் சத்தியமேயென்று இவர் ஒப்புக்கொண்டமையாலும் அவற்றில் நன்மை தீமைகள் இரண்டும் உண்டென அங்கிகரித்தமையாலும் குற்றத்தை நீக்கிக் குணத்தைக்கொள்ளுவது எல்லாருக்கும் ஒத்ததே யென்று கூறினும். இங்ஙனம் கூறியதனுல் குற்றங்களை நீக்கிக் கொள்ளக்கூடிய மதங்களுண்டெனவாகின்றதேயல்லாமல், குற்றங்கள் நீங்கியமதங்களும் (குற்றங்களுக்கெல்லாங்காரணமாகிய) சிவமாதி தெய்வங்களும் நிலைநின்றமை காண்கிலம். பிரகசனம், சித்தாந்தம், உத்தாபன முதலிய தருக்கசாதனசாத்திரப்படி எங்ஙனம் அனுமானித்தற்கிடமுண்டோ வதைப் பாரமரிசித்துக் காட்டி இவரது அநுமானத்தை நிலைநாட்டுவாராக. இஃது பத்தொன்பதாவது நூற்றாண்டிற் படித்த பன்மதாபிமான தருக்கசாத்திர நிபுணத்துவம்போலும். குற்றத்தை நீக்கிக் குணத்தைக்கொள்வோமென்பதனல பூவையும் புனலையும் பேசனத்தையும் நீக்குவோமென்று இவரது தெள்ளறிவிற்குப் புலப்பட்டமை காலவழுக்குடைத்து. நீரைநுரைபோக்கியும் நெல்லை உமிபோக்கிச் சமைத்தும் உண்போம் பூவைப் புல்லிதழ்போக்கிச் சூடிக்கொள்வோமென்பதே நங்கருத்தென சாதாரண படிப்பாளிகளும் தெள்ளிதினுணர்வர்.

(b) சைவர் இதக்கழுகுத்து க்ஷமணுதி புறச்சமயிகளைக் கழுவேற்றினர் என்று யாம் பொதுப்படக் கூறினதைத் 'தம்பந்தம் போக்கும் சம்பந்தர்' அங்ஙனஞ் செய்தாரெனத் தாமே தலைமேல் போட்டுக்கொண்டு, திரும்ப அவர் அங்ஙனஞ் செய்யவில்லையென்று திருவிளையாடற்பாட்டைத் தெருவிளையாடலாக்கிவிட்டார். அங்ஙனஞ் செய்ததல்லாமல யாமுஞ் சைவத்தினை யுணரோமென்று தோஷாரோபணமுஞ் செய்தார். விவேகிகளே! யாம் சைவத்தினை யுணரவில்லை யென்பதும், இவர் உணர்ந்தவரல்லரென்பதும் அடியில் விளங்கும். இவர் மேல்காட்டிய பாக்கள் எப்புராணத்தில் எப்படலத்திலுள்ளவை? திருவிளையாடற்புராணத்தில் சமணரைக்கழுவேற்றிய படலத்திலன்று? சமணர் தாமே கழுவேறினரென்று இவர் காட்டிய பாட்டின்படி நடந்தது உண்மையாயின் 'கழுவேறிய படலம்' என்றிராமல் கழுவேற்றியபடலமென்று இருத்தற்குக் காரணமென்ன? ஏற்றிய-ஏறியவென்னுஞ் சொற்களுக்குப் பேதமிலவோ? இத்தகைய கோமுட்டி சாட்சியைக் கோர்ட்டார் கேட்டால் வாயால் நகைப்பார்களோ? சமயத்தினதும் நூல்களினதும்சம்பவாதி உண்மைகளை அகச்சாக்ஷிபுறச்சாக்ஷிகளைக்கொண்டுவிசாரிக்குங்கால், அகச்சாக்ஷியிலேயே படலத்திற்கும் படல நுதலிய பாக்களுக்கும் பரஸ்பரவிரோதமிருப்பின் அந்த மதாபாசத்தை விவேகிகள் எவ்வாறுகொள்வர்? இன்னும் இவர் பிரமாணமாகக்கொண்ட அத்திருவிளையாடற் புராணத்திலேயே, அப்படலத்திலேயே மேல்காட்டிய பாட்டிற்கு அடுத்தபாட்டிலேயே "ஏனைப்பறிதலையவரைச்சைவவிதத்தினல்வேடம்பூண்ட வேடத்தார் பற்றிப்பற்றிச் சிதைத்து இடர்செய்தேறிட்டார் திரிதலைக்கழுக்கோல் தன்னில்" என்றிருப்பதை யூகிக்கவொட்டாமல் இவர் மதம் இவர்கண்ணைமறைத்து மறக்கருணையென்று சொல்வித்தமை விந்தை! விந்தை! இன்னும் அடுத்தபாடல்களைப்பார்த்தால் க்ஷமணர்பால சைவர்புரிந்தகொடுமைகள் நன்குவிளங்கும். மேலும் இவர்தம்பந்தம்போக்கும் சம்பந்தரும் க்ஷமணுதிகளைக்கழுவேற்றின ரென்பதும் அவர்களைக்கழுவேற்ற உடன்பட்டாரென்பதும் அடியிற்காட்டும், திருத்தொண்டர்புராண சாரத்தினலேயும், பெரியபுராண விருத்தத்தினலேயும், திருஞானசம்பந்தர் தேவாரத்தினலேயும் விளங்கும்.

ஆரெரியிட்டெடுத்தவேடவைமுன்னேற்றி
யாற்றிலிடுமேடெதிர்போயனையவேற்றி
யோரமணரொழியாமேகழுவிலேற்றி
யோதுகிருப்பதிகத்தாலோடமேற்றிக்
காருதவுமிடிபுத்தன்றலையிலேற்றிக்
காயாதபனையின்முதுகனிகளேற்றி
யீரமிலாவங்கமுயிரொய்தவேற்றி
யிலங்குபெருமணத்தானையெய்தினரே.

மன்னவன்மாறன்கண்டுமந்திரியாரைநோக்கித்
துன்னியவாதிலொட்டித்தோற்றவிச்சமணர்தாங்கண்
முன்னமேபிள்ளையார்பாலனுசிதமுற்றச்செய்தார்
கொன்றுனைக்கழுவிலேற்றிமுறைசெய்கவென்றுகூற
புகலியல்வந்தஞானப்புங்கவரதனைக்கேட்டும்
இகலிலரெனினுஞ்சைவரிருந்துவாழ்மடத்திற்றீங்கு
தகவிலாச்சமணர்செய்ததன்மையாற்சாலுமென்றே
மிகையிலாவேந்தன்செய்கைவிலக்கிடாதிருந்தவேலை,

வேதவேள்வியைநிந்தனைசெய்துழ
லாதமில்லியவமணுடுதேரரை

வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
பாதிமாதுடனுபபாமனே.

இன்னும் இவர்கள்புரிந்த கொடுமையினை சிவரகசியத்தினும், உபமன்யுபக்தவிலாசத்தினும், அகத்தியபக்தவிலாசத்தினுங்காணில் நன்குவிளங்கும். அத்திருவிளையாடலிலேயே,

[வழிவழிவருமாணுக்கர் சாதற்குவருந்திநெஞ்ச
மழிபவர்திருநீறிட்டா ரதுகிட்டாதயர்வாராவி
ணிழிவில்கோமயத்தையள்ளிப் பூசினுரிதுவுங்கிட்டா
தொழிபவராவின்கன்றைத் தோளிலிட்டுயினைப்பெற்ருர்.
கூறிட்டமூன்றுங்கிட்டா தயர்பவர்குற்றந்தீர
நீறிட்டார்நெற்றியோடு நிருமலகோமயத்தின்
சேறிட்டார்நெற்றியோடு நெற்றியைச்செறியத்சாக்கி
மாறிட்டபாசந்தன்னை மறித்திட்டுப்பிறப்பைவெல்வார்.
மற்றிவர்தம்மைமூற்றஞ் செய்திலர்மடிந்தோர்யாருஞ்
சுற்றியசேனங்காக நரிகளுப்தொடர்ந்துகௌவிப்
பற்றினநீர்த்தூத்தின்னக் கிடந்தனர்,]

இரக்கமற்ற சைவர்கள் புரிந்த கொடுமையைச் சகிக்கலாற்ருது சிலர் சாம்பரைப் பூசின ரென்றும், அது கிட்டாதவர் கோமயத்தைப் பூசின ரென்றும், அதுவுங் கிட்டாதவர் பசுவின் கன்றைத் தோளிற் றூக்கினர்க ளென்றும், அதுவுங்கிட்டாதார் நீறினையுங் கோமயத்தையுந் தரித்தார்நெற்றியோடு தங்கள் நெற்றியைப் பொருத்தினர்களென்றுங் கூறியிருப்பதைக் காணுமை என்னதுரபிமானமோ ! இன்னும் இவற்றின் உண்மைவிரோதத்தை ஆராயவேண்டின் சூக்ஷமணவிஜயத்திற்காண்க. இத்தியாதி நியாயப்பிரமாணங்களாலும் "மறக்கருணையென்று" இவர்வாயினலேயே வெளிவந்தமையாலும் எமதுகூற்று மறுக்கப்பட்டதில்லை. சைவர் கொடுமைபுரிந்தாரென்னும் எமதுகூற்றை மறுக்கவழியில்லாமலே இவ்வளவுதூரம் வீண்வாதம் செய்தமை நகைப்புக்கிடமாம். இத்தகை யோர்வீண்வாதத்திற்கு இடங்கொடுப்பது பிரயோசனமுடைத்தாவென்பதை விவேகிகள் சிந்தித்தல்வேண்டும்.

(c) சாத்திரத்திற் பயிலுவதற்கு தேகதிடம்போதாதவர் போகும்வழி ஆபாசமயானவழியே; மதிநுட்பமமையப்பெருர் போகும்வழி உன்மத்தப் பரிகாரச்சாலைவழியே—ED.

ஜூபிலிஉற்சவ ஆயத்தம்·

சென்னைமகமதியர்கள் மகாராணியவர்களுடைய ஜூபிலி வருஷோற்சவத்தைக் கிரமமாயக் கொண்டாடவேண்டியதைப்பற்றி ஆலோசிக்கும்பொருட்டு சென்னைபிரசிடென்சி காலீஜுமந்திரததில் 23௳ சபைகூடினுர்கள். மகமதியபிரபுக்கள் அநேகர்வந்திருந்தார்கள். அக்கிராசனதிபதியாகிய மொகமத்மாமத்கான் பஹதூரவர்கள் மேற்கண்டவிஷயத்தைப்பற்றி யோசிப்பதற்காகச் சபைகூட்டப்பட்டதென்று தெரிவித்தார். டாக்டர் மோதீன் ஷெரீப்கான் பஹதூர் அவர்கள் பிரிட்டிஷ்துரைத்தனத்திலேஜனங்கள்முக்கியமாயடைந்த பிராணரட்சணை,சொத்துரட்சணை,கல்வி,பென்ஷன் இவைகளையும்,மற்றும் அநேகநன்மைகளையும்பற்றி வெகுவாய்ப்பேசி, இத்தியாதிகாரணங்களினல் மகாராணியவர்களுடைய ஜூபிலி உற்சவத்தை அகத்தியம் கொண்டாடவேண்டுமென்று கூறினர்.

இந்த விசாலமான ராச்சியத்தின் சக்கரவர்த்தினியாரவர்களுடைய பிரதிநிதியாகிய கவர்ன்மெண்டு நமக்குளது. நாம் அந்த கவரன்மெண்டாருடைய வாக்கே சக்கரவர்த்தினியாருடைய வாக்காகக்கொள்ளவேண்டும், இராஜப் பிரதிநிதியவர்கள் இந்தியா ஸ்டேட்டு செக்கிரிட்டேரியவர்களோடு தகுந்த ஆலோசனை செய்தபின்புதான் அநேக நல்ல ஏதுக்களைப்பற்றி இந்தியா முழுமையிலும் ஜூபிலி உற்சவத்திற்கு பிபர்வரி-மீ 16௳ நியமித்தார்கள்; ஜூன்மீ 20௳ ஆகிய சரியானதினத்திலே அதைக்கொண்டாட நமக்கு இஷ்டமிருந்தபோதிலும், ராஜப்பிரதிநிதியினுடைய தீர்மானத்தை ஆடசேபிப்பதாவது பிபர்வரிமீ 16௳ நேமித்ததற்கு அவரைக்காரணங் கேட்பதாவது நமது வேலையல்ல;இந்தியாவின அனேகபாகங்களில் ஜூன்மீத்திலே ரிதுக்காலம் விருப்பமானதா யிருக்கமாட்டாது; நமது சக்கரவர்த்தினியாரைச் சந்தோஷிப்பிக்கவும் நமது விஸ்வாசத்தைத் தெரிவிக்கவும் உற்சவங் கொண்டாடப்போகிருேம், ஆதலால் தினத்தைக் குறித்து ராஜப் பிரதிநிதியினுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதில் நாம் ஆட்சேபிப்பது சரியல்ல, அதனுலே ராஜப்பிரதிநிதியவர்களுடைய கோபத்திற்கும் பாத்திரராவதுமல்லாமல், சக்கரவர்த்தினியாருக்கும் வெறுப்புண்டாக்குவோம்; இப்படிப்பட்டது குடிகளுடைய விஸ்வாசத்திற்கு எவ்வளவும் தகாது. ஆசலால், அபிப்பிராயங்களில் சொற்பவேறுபாடு உண்டாயிருந்தபோதிலும், அதை பொதுக்கிவிட்டு யாவரும் ஒருமித்து அந்தப் பதினுறுந்தேதியிலாவது அதற்காகத் துரைத்தனத்தார் நேமிக்கிற வேறே எந்ததினத்திலாவது உற்சவங்கொண்டாட வேண்டுமென்று ஆமத்மோதீன்கான் பஹதூரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு யாவராலும் அங்கீகரிக்கப்பட்டது. பிறகு, மகாராணியவர்களுக்கு எழுதம் விண்ணப்பத்தை விசித்திரமான பெட்டியில் அடக்கஞ்செய்து அனுப்பவேண்டுமென்றும், வசூலாகிற பணத்தில் மிகுதியிருந்தால் மகமதிய ஏழைகளுக்கு உற்சவதினத்தில் அன்னம் அளிக்கவேண்டுமென்றும் சக்கரவர்த்தினியார் பேரால் மகமதியவித்தியார்த்திகளுக்கு ஸ்காலர்ஷிப்ஏற்படுத்தவேண்டுமென்றும், தீர்மானஞ்செய்யப்பட்டது. கடைசியாய், ராணியாரவர்களுக்கு விண்ணப்பம் அனுப்பும்விஷயத்தில்மாத்திரம் மகமதியர்கள் இந்தியாவிலுள்ள மற்ற வகுப்பாரைப் பிரிந்திருக்க இஷ்டமே யல்லாமல், மற்ற சகல விஷயங்களிலும் எல்லாரோடுங் கூடிக் குலாவ இஷ்டமுள்ளவர்களாகவேயிருக்கிருர்களென்றும், ஆமத்மோதீனகான் பஹதூரவர்கள் தெரிவித்தார்கள்.

ஜூபிலி உற்சவங் கொண்டாடவேண்டியதினிமித்தம் சென்னைசுதேசபிரபுக்கள்அடுத்தடுத்து சபைகூடினுர்கள். சிலஐரோப்பியர்களும் வந்திருந்தார்கள். இங்கிலீஷ் துரைத்தனத்திலே, முக்கியமாய் சக்கரவர்த்தினியாரவர்களுடைய ராச்சியபாரகாலமாகிய ஐம்பது வருஷங்களில் இத்தேசத்திற்குண்டாகிய அளவிறந்த நன்மைகளை எழுதினல் அநேக கிரந்தங்களாகுமென உணர்ந்த நன்றியினல் உற்சவங்கொண்டாடவேண்டுவது அத்தியாவசியகமென சர்வத்திர சம்மதத்தை தெரிவித்தார்கள்; ஆனுல், கிரமமான தினத்திற்கு நான்குமாசமுன்னதாக அந்த உற்சவத்திற்கு பிபர்வரிமீ 16௳ நேமிக்கப்பட்டிருப்பதைப்பற்றிமாத்திரம் யோசனை யுண்டாயிருந்தது. கொஞ்சநாளைக்குமுன்னேதான் நேரிட்டு, இன்னுந் தீராதிருக்கிற அக்கினி ஆபத்து விசனத்தினுலும், அந்த ஆபத்து சில தனவான்களுடைய குடும்பத்திலே நேர்ந்திருப்பதினுலும், திரவிய சகாயம் குறைவுபடுமாயின், சிறப்பாக உற்சவம் நடப்பது தடைபடுமென்கிற அச்சத்தினுலும் சிலநாள் பொறுப்பதுசந்தர்ப்பமாயிருக்குமென்று முதலில் எண்ணினுர்கள். இந்தஉற்சவம் நமது இந்தியாமுழுவதும் ஏககாலத்தில் கொண்டாடுவதுசிரேஷ்டமாதலாலும், மற்றப் பிரதேசங்களிலே அந்தத் தினத்தைச்குறித்து ஆட்சேபமொன்றுமில்லாமையாலும்,கல்கத்தாவிலும்பொம்பாயிலும்ஜூன்மீ மாரிகாலமாயிருக்குமாதலால் உற்சவத்திற்கு இடைக்கிடை ஒருவேளை பங்கமுண்டாகுமென்கிற யோசனையினுலும், பிபர்வரி 16௳யே சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அதற்குவேண்டிய காரியங்களை நடத்தக் கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. கடைசி சபையில்அக்கிராசனதிபதியாக வீற்றிருந்த கவர்னரவர்கள் பணஞ்சேகரிப்பதுமுதற்காரியமானதுபற்றி ஏழை கவர்னரிடத்தில் வசூல்செய்யும்போது மகராச வக்கீல்களைவிடமாட்டீர்களென்றும அவர்களை விடாதபோதுதாதாக்களாகிய ஜமீன்தாரர்களை விடமாட்டீர்களென்றும் இவ்வாறு யாவருக்கும் சிரிப்பும் சந்தோஷமுமுண்டாகும்படி சிலவேடிக்கை வசனங்களைப் பேசி மிகுதியாய்ப் பணஞ் சேகரிக்குமார்க்கத்தைச் சூசனையாய்க் காட்டினர்.

வசூலாகுந்திரவியத்திலே உற்சவத்திற்கு வேடிக்கையார்த்தமான செலவுபோக மிகுதிப்பணத்தைக்கொண்டு சென்னையில் கட்டடங்கட்டி ஜூபிலிஞாபகார்த்தமாக சக்கரவர்த்தினியார்பேரால் ஓர்சாலை யேற்படுத்துவது நன்மையாக எண்ணியிருந்தபோதிலும், ஒன்பது வருஷத்திற்குமுன்னே இவ்விடத்தில் கொடியக்ஷாமம் நேரிட்டு ஜனங்கள் அபரிமிதமாய் மாண்டபோது, மகாராணியாருக்கும் இங்கிலாந்து குடிகளுக்கும் மனுவுசெய்துகொண்டமாத்திரத்தில், சுமார் ஒருகோடிருபாய் கையொப்பமூலமாய் அவ்விடத்திலிருந்து அனுப்பப்பட்டதே; அது ஒருபிரதேசப் பிரயோசனத்துக்காகவே. இப்போது ஞாபகார்த்தமாக லண்டன்பட்டணத்தில் உத்தேசித்திருக்கிற சுபகரமான பெருத்தகட்டடம் மகாராணியாருடைய அதிகாரத்துக்குட்பட்ட ராச்சியமுழுவது மிருக்கிற குடிகள் ஒன்றுசேர்ந்து கட்டவேண்டியதாயிருக்கிறபடியாலும், மகாராணியவர்களும் அதற்குச்சம்மதித்திருப்பதாலும், இவ்விடத்தில உற்சவகொண்டாட்டத்திற்கும், தருமவிஷயத்திற்கும், ஞாபகார்த்தமான வேலைக்குஞ் செலவிட்டபின்பு, ஓர்பெருந்தொகை லண்டன்பட்டணத்துக் கட்டடத்துக்கு அனுப்பவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.அச்சமயத்தில் சென்னை ஷெரிப்பு P.S. இராமசாமிமுதலியார் C. I. E. அவர்கள் கையொப்ப ஜாபிதாவில்கையொப்பமிடுவதுமல்லாமல் தமதுசொந்தசெலவிலே பலஏழைப் பாடசாலைகளின் வித்தியார்த்திகளுக்கு விருந்தளிப்பதாகவும், ஜூபிலி ஞாபகார்த்தமாக "விக்டோரியாவார்டு" என்னும்பெயரால் மணியக்காரசாவடி (கஞ்சிதொட்டி) யில் பெண்டுகள் வைத்தி

யசாலைகட்டுவது முதலியவற்றிற்காக ரூ 25,000 கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார். மேலும், வெளிப்பிரதேசத்திலுள்ள தமது சிநேகிதரொருவர் பிபர்வரிமீ 16௳ சென்னைக்குவந்து, சக்கரவர்த்தினியாரைப்போல வெண்கலப் பிரதிமை யொன்று கொடுக்க உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

கடிதம்.

ஐயா, தத்துவவிவேசினி பத்திராதிபரே,

சிலவாரங்களுக்குமுன்னமே தங்கள் கையொப்பக்காரர்களில் சிலர் கேட்டுக்கொண்டபடி சென்ற இரண்டுபத்திரிகைகளில் பழைய வாதங்கள் பிரசுரஞ்செய்யப்பட்டிருப்பதைக் கண்ணுற்று ஆனந்தமடைந்தேன். தங்களைக்கேட்டுக்கொண்டவர்களில் யானுமொருவனே. அப்படிப்பட்ட விஷயங்களைப் புதிய கையொப்பக்காரர்கள் அறிவார்களாகில், சீர்தூக்கிப்பார்க்க இடமுண்டாகுமாதலால், அவ்வித விசேஷ விஷயங்களை அப்போதப்போது பிரசுரஞ்செய்வீர்களென்று கேட்டுக்கொள்ளுகின்றனன்.

த். பாலசுந்தரமுதலியாரென்பவர் எழுதியதாகச் சென்றவார பத்திரிகையில் கண்டிருக்கிற அம்சங்களில் முக்கியமானவைகளுக்குத் தாங்கள் சுருங்கச்சொல்லவேண்டிய நியாயத்தின்படி சமாதானங் கூறியிருக்கிறீர்கள். "மதங்களனையவு மனிதரது ஏற்பாடுகளேயொழிய ஒரு முதல்வரேற்பாடாகத் தோன்றவில்லையென்பது சத்தியமே" யென்று ஒப்புக்கொள்ளுகிற ஷை முதலியார், "சைவசமயமேசமயமென்று திருவாய்மலர்ந்தருளிய தாயுமானவரும் சமயாதீதப்பழம்பொருளென்று கடவுளைக் குறிக்கின்றனர்" என்று தமது கொள்கைக்கு மேற்கோளாகக் கூறியுள்ளார். சமயமென்பது கற்பனை, கடவுளொருவருண்டென்று தாயுமானவர் சொல்லியிருப்பாராயின் மேற்கோளாகும்; அப்படிக்கன்றி, "சைவசமயமேசமயம்" எனவற்புறுத்திச் சொல்லியிருப்பதனால், கற்பனாசமயங்கள் பலவற்றுள்ளும் சைவமேநிர்த்தோஷமானதென்பது தோன்ற அதை உதகரித்தனராக்கும். அன்றியும், விஷ்ணுபிர்மாக்களை இழிவுபடுத்திச் சிவனைச் சிறப்பிக்கிறபாடலை உதகரித்திருப்பதை யோசிக்குமிடத்து, சமயாதீதப்பழம்பொருள் அல்லது கடவுளென்றது சிவன்தானே? முதலியாரதுவாதத்தை யாராயுங்கால், பொதுமையாகக் கடவுளொருவருண்டென்கிற நம்பிக்கையில்லாமல் சைவசமயப்பற்றுடையவராகக் காணுகிறார்.

ஆன்மாக்கள் சுகமனுபவிக்கவேண்டுமெனக் கருதி அளவற்ற கோட்பாடுகளைச்செய்த நம்முன்னோர் மதியே மதியென்று ஓரிடத்தில் வியந்து மூன்று வியப்புக் குறியிட்டிருக்கிறார். மற்றோரிடத்திலே, அன்னோர்செய்த "ஒவ்வொரு (சமய) ஏற்பாட்டிலும் தீமையும் நன்மையும் பிரிவறவுளவாதலின், (இக்காலத்து) மூதறிஞர் அவ்வேற்பாட்டில் நன்மை மிககிருப்புழி யதனை யங்கீகரித்தலும், தீமைமல்கிநிற்புழித்திரஸ்கரித்தலுஞ் செய்யாநிற்பர்" என்று ஒப்புக்கொள்ளுகின்றனர். மிக வியக்கத்தக்க முன்னோர்கள் செய்தனவற்றுள் நிகழும் நன்மைதீமைகளைப் பகுத்தறிபவர்கள் அவர்களினுஞ் சிறந்தவர்களாவார்கள். சமயக்கோட்பாட்டிலுள்ள மிக்க தீமையையெடுத்துக்காட்டுவோரும் (அது தீமையல்ல, நன்மைதானெனச் சாதிக்கப்படுமளவும்) முதலியாருடைய கருத்தின்படி மூதறிஞராகவே யிருக்கின்றார்கள்.

"அவனியக்க நாமியங்கும்பாவைகளெனப்பகர்வதால் வினையுந் தீமை யிஃதெனவுணரவல்லேனல்லேன்" என்றுகூறி, ஆன்மாக்களின் இருவினைகளைக் கயிறாகக்கொண்டு கடவுள் அவற்றை ஆட்டுகிறானென்கிற ஒரு செய்யுளையும் உதகரித்திருக்கிறார். இதனாலே, நன்மையாயினும் தீமையாயினும் அவன்செய்விக்க மனிதன்செய்கிறவனாகிறானேயல்லாது, எதற்கும்மனிதன்பொறுப்பாகமாட்டான். மனிதனுக்குத் தனக்கென ஓர் செயலில்லாதபோது, வினை இவனால்வந்ததாகாமல் புரண்டுபோம், புரளவே மற்றியாவும் புரளும். இக்கோட்பாடு, "இந்தச்சீவனால் வருமறுபகையெலாம் இவன்செயலென்னாது, அந்தத் தேவனால் வருமென்ற மூடர்கள் அதோகதியடைவாரோ" என்கிற கோட்பாட்டுக்கு விரோதமாயிருக்கிறது. முந்தியது முதலியாருக்குச் சம்மதமானது. பிந்தியது எனக்குச்சம்மதமானது; ஆயின், இவ்விரண்டுமடங்கிய ஓர் சமயத்திலகப்பட்டவன் இருதலைக்கொள்ளிபோ லிடிபடத்தான்வேண்டும்; அல்லது சமயத்துக்கேற்றபடி அவ்விரண்டையுந்தான் சொல்லிக்கொள்ளவேண்டும். முதலியார் ஒப்புக்கொண்டபடி கற்பனையான ஒவ்வொருசமயத்தையும் ஆராய்ந்தபின்புதான் நன்மைமிகுந்துள்ள சமயத்தைக் கைக்கொள்ளவேண்டுதலின், அவர் அப்படியே செய்திருப்பாரென்பது முடியாத காரியம். இனியொருவேளை செய்வார்போலும். தமக்கு முந்திய தலைமுறையார் கைக்கொண்டிருந்தசமயமே தமக்கு நற்சமயமாயின், மற்றவர்களுக்கும் அப்படித்தானே. அப்போது நன்மைமிகுந்த தெது, தீமைமிகுந்ததெது? இவர் அனுசரிக்கு மதத்தில் தீமை ஏதாவது கண்டு கழித்தனரா? அல்லது லவுகிககள் எடுத்துக்காட்டுந் தீமைகளை ஒப்புக்கொண்டனரா? இவர் தன் சமயத்தையும் கற்பனையென்று சொல்லுகிறதை அச்சமயத்திலுள்ள மற்றவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்களா? மற்ற சமயிகளும் தம்தம் சமயத்தை அவ்வாறானதென்றே ஒப்புக்கொள்ளுவரா?

தருக்காதி நியாயசாஸ்திர முதலியவற்றில் சொற்பனத்திலும் பயின்றிராத கோடானுகோடியான்மாக்களுக்கு கற்பிதசமயங்களும் தெய்வங்களும் பயன்படாவா வென்றார். இதனாலே அவ்வித அவிவேகிகளுக்கேயன்றி சாஸ்திரங்களைப் பயின்ற விவேகிகளுக்கு அவை அவசியமில்லையென்றும், அப்படிப்பட்ட விவேகிகள் சிறுபான்மையோர்தானென்றும், விசாரணைபுருஷர்கள் விர்த்தியாக ஆக அவற்றைக் கைவிடுவார்களென்றும் தாமே ஒப்புக்கொள்ளுகிறவராகிறார். ஆதலால், இவ்வளவு எடுத்துப்பேசுந் திறமுடைய இவர் என்னதசையிலிருக்கின்றாரோ தெரியவில்லை. அன்றியும்,

கற்பனாமதத்தையும் தெய்வங்களையுங்காட்டி மனிதருக்கு நன்மை பயப்பிப்பதற்குத் திருஷ்டாந்தமாக, ஓர் தந்தை தனது குழந்தையைக் கிணற்றருகே போகாதபடி ஓர் கயிற்றைப் பாம்பெனக்காட்டித் தடுப்பதினாலே நன்மையுண்டாகிறதென்று கூறுகிறார். அக்குழந்தைப்பருவம் நீங்கியபின்பு, அப்பிள்ளை கயிற்றைக்கயிறாகவேகொள்ளுவன்; எப்போதும்பாம்பெனக்கொள்ளில் ஆயுசுவரையில் சுத்தமூடனாகவேயிருக்கவேண்டும். அவ்வாறேமதங்கள் கற்பனையெனத்தேர்ந்தவர்கள் "மனச்சாட்சிக்கு நேர்மாறாகவாயினும் ஒன்றைக்கூறியேனையோர்க்குச்சுகத்தினையூட்டுவதே நன்மை" எனவும், "இல்லையென்பதை யுண்டென்றறைவதாற் றீமைவிளைதலில்லையே" எனவும் முதலியார் கூறியபடிச் செய்து மற்றவர்களை எக்காலத்தும் மூடஸ்திதியில்வைத்துத் தாங்களும் மூடர்களாக நடித்துக் காலத்தையும் பணத்தையும் வீணாயொழிப்பதைப்பார்க்கினும்; "சமயத்தை யுணர்த்துவதுபோல சாஸ்திரங்களை யுணர்த்துதல் கூடுமே" என்று பத்திராதிபர் கூறிய நன்மொழிகளையேற்றுக்கொண்டு, சமயங்கள் கற்பிதமெனத் தெரிந்துகொள்ளுவதற்கு முகாந்தரமாக, முதலியார் எடுத்துக்காட்டியிருக்கிற பஞ்சபூதசாஸ்திர முதலியவற்றில ஷை முதலியார் முதலான விவேகிகள் பயிலுவதும் ஏனையோரைப் பயிற்றுவித்து விவேக மூட்டுவதுமே உத்தமம்.

கையொப்பக்காரன்.

கடிதநேயருக்கு

N. R. V.—தத்துவவிசாரணைக்குச் சம்பந்தப்பட்டதல்லவாதலால் பிரசுரிக்கப்படவில்லை.

நாகேந்திரகுரு.—தமக்குவேண்டியது முழுவதும் 42, 44 நம்பர்களில் காணலாம். கையொப்ப விவரம் இப்பத்திரிகையின் கடைசியில் பார்க்க.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்துக்கு—ரூ 3—0—0
வெளி ,, ,, —ரூ 1—14—0
செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

தத்துவவிவேசினி

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)		Rs.	A.	P.	வெளியூர்—(அட்வான்சு.) (தபாற்செலவுஉள்பட)		Rs.	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5	0
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13	0
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8	0

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு. முனிசுவாமிநாயகருக்கும் ;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிறாஸ் செகுலர்சொசைட்டி ஆனரரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.